# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
## CC-53/2025
## Prosecution witness - PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present)
05.02.2026- 03.15 PM
<u>முதல் விசாரணை</u>:-

1. நான் சிறைக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2.ஆறுமுகம், 3. மாரிமுத்து, 4 வேல் ஆகியோர்களை தெரியும்

2. சும்பவத்திற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஆஜர் எதிரி தினகரனிடம் கடனாக ரூ.50,000/-த்தை வாங்கிருந்தேன். கடந்த 29.07.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் சிக்கலில் உள்ள காளிமுத்து நாடார் கடையின் முன்பாக நின்றுகொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை சிறைக்குளம் மேற்கு தெருவில் முன்பாக உள்ள சர்ச்சுக்கு கொண்டு சென்று எதிரிகள் இருவரும என்னை கையால் சரமாறியாக அடித்தார்கள். கீழ் உதடு, வலது காலில் அடித்தார்கள். நெஞ்சில் உள்காயம் ஏற்பட்டது.

3. அதன் பிறகு தேவிடியா மகனே உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அன்றே நான் காவல் நிலையம் வந்து இரவு சுமார் 09.45 மணியளவில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். பின்னர் மறுநாள் காலை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**

என்னை போலீசார் காயம்பட்ட அன்றே காவல் நிலையத்தில் வைத்தும், பின்னர் சம்பவத்திற்கு மறுநாள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்தும் விசாரணை செய்தார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. புகாரில் நான் ரூ.50,000 பணம் வாங்கியதாக கூறினேன் என்றால் சரிதான். ஆனால் சம்பவத்திற்கு பின்னர் அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன். புகாரில் என்னை எந்த வாகனத்தில் எதிரிகள் அழைத்துச் சென்றதாக கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் இருசக்கர வாகனத்தில என்னை நடுவே அமர வைத்து அழைத்துச்சென்றார்கள்.

மேற்படி விவரங்களை புகாரில் கூறவில்லை என்றால சரிதான். ஆனால் பதற்றட்டத்தில் கூறவில்லை. புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை தனி நபர்கள் யாரும் பார்க்கவில்லை என்றால் எதிரிகளின் உறவினர்கள் பார்த்தார்கள். நான் புகார் மனுவில் சம்பவத்தை பார்த்ததாக யாரையும் கூறவில்லை என்றால் சரிதான். நான் வரும் வழியில் மாரிமுத்து, ஆறுமுகம் ஆகியோர்கள் பார்த்தார்கள். அப்போது மணி சுமார் இரவு 09.15 இருக்கும். காவல்நிலையத்தில் மருத்துவ நமூனா கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். எதிரி என்னிடம் கொடுத்த ரூ. 50,000/– பணத்தை திரும்ப கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், யார் எந்த பகுதியில் தாக்கினார்கள் என்று உண்மையாக சம்பவம் நடைபெற்றிருந்தால் குறிப்பிட்டிருப்பேன் என்றும், பொய்யாக நடக்காத சம்பவத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளதால் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி